# மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
# கண்டி
# அலகுப் பரீட்சை - 09

பாடம் : இந்துநாகரிகம் நேரம் : 1 மணி

**மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

(01)பதினான்கு மெய்கண்ட சாஸ்திர நூல்களில் முதல் நூலாக விளங்குவது.

1.திருவுந்தியார் 2.சிவஞான போதம் 3.சிவஞான சித்தியார் 4.சிவப்பிரகாசம் 5.உண்மை விளக்கம்

(02)அகச்சந்தானகுரவர்களின் பெயர்கள் அடங்கும் தொகுதி

1.மெய்கண்டார்,அருணந்தி சிவாச்சாரியார்,மனவாசங்கடந்ததேவர்,உமாபதி சிவம்.

2.திருநந்திதேவர்,மெய்கண்டார்,சனற்குமாரர்,பரஞ்சோதி முனிவர்.

3.திருநந்திதேவர்,சனற்குமாரர்,சத்தியஞான தரிசினிகள்,பரஞ்சோதி முனிவர்.

4.அருணந்தி சிவாச்சாரியார், சத்தியஞான தரிசினிகள், உமாபதி சிவம்,மெய்கண்டார்.

5.சத்தியஞான தரிசினிகள்,சனற்குமாரர்,மெய்கண்டார்,மெய்கண்டார்,பரஞ்சோதி முனிவர்.

(03)பதினான்கு மெய்கண்ட சாஸ்திர நூல்களில் சித்தாந்த அட்டகத்துள் அடங்குபவை

1.வினாவெண்பா ,கொடிக்கவி,நெஞ்சுவிடு தூது,உண்மை நெறி விளக்கம்.

2.திருவுந்தியார்,திருக்களிற்றுப்படியார், நெஞ்சுவிடு தூது, கொடிக்கவி.

3. சிவஞான போதம், சிவஞான சித்தியார்,இருபாஇருப∴து,திருவருட்பயன்.

4. உண்மை விளக்கம், வினாவெண்பா, கொடிக்கவி , சிவஞான போதம்.

5. சங்கற்பநிராகரணம்,போற்றிப்ப∴றொடை,.திருவுந்தியார்,திருக்களிற்றுப்படியார்.

(04) பதினான்கு மெய்கண்ட சாஸ்திர நூல்களுல் காலத்தால் முற்பட்ட நூலாக அமைவது

1. சிவஞானபோதம்,சிவஞானசித்தியார். 2. வினாவெண்பா,கொடிக்கவி. 3.உண்மைவிளக்கம் சிவஞானபோதம்

4. திருவுந்தியார்,திருக்களிற்றுப்படியார். 5. சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம்.

(05) முப்பொருள்களும் எவை

1.பதி,ஆணவம்,கன்மம். 2.பதி,பசு,பாசம். 3.பசு,கன்மம்,மாயை 4.பாசம்,ஆணவம்,கன்மம். 5.பசு,பாசம்,கன்மம்.

(06)‘சிவமாதல் வேதாந்த சித்தாந்தமாகும்’ என குறிப்பிட்டவர்.

1.திருமூலர் 2. திருநந்திதேவர் 3 பரஞ்சோதி முனிவர் 4. மெய்கண்டார் 5.மனவாசங்கடந்ததேவர்.

(07) ரௌரவ ஆகமத்தின் பொருளை விளக்கும் வகையில் அமைந்தநூலாக அமைவது.

1. சிவப்பிரகாசம் 2.சிவஞானசித்தியார் 3. வினாவெண்பா 4. உண்மைவிளக்கம் 5. சிவஞானபோதம்

(08) மறைத்தல் தொழிலை சுட்டுவதாக அமைவது.

1. சிருஷ்டி 2. திரோபவம் 3.சங்காரம் 4.அநுக்கிரகம் 5.திதி

(09) சிவஞானபோதத்தின் வழிநூலாகவும்,பரபக்கம்,சுபக்கம் எனும் இரு பிரிவுகளையும் கொண்ட நூல்

1. சிவஞானபோதம் 2. சிவப்பிரகாசம் 3. சிவஞானசித்தியார் 4. திருவுந்தியார் 5. திருவருட்பயன்.

(10) ஆணவ மலத்தால் மட்டும் பீடிக்கப்பட்டவரை சுட்டுவதாக அமைவது.

1. சகலர் 2. பிரளயாகலர் 3. சகலாவத்தை 4. விஞ்ஞானகலர் 5. சுத்தாவத்தை

(11) ஆகந்துக மலம் எனப்படுபவை

1. ஆணவம்,கன்மம் 2.ஆணவம்,மாயை 3.நல்வினை,ஆணவம் 4. முத்தி,மாயை 5. கன்மம்,மாயை

(12) நான்கு வெண்பாக்களால் ஆன மிகச்சிறிய நூலாக அமைவது

1. கொடிக்கவி 2. திருவருட்பயன் 3. இருபாஇருப∴து 4. நெஞ்சுவிடு தூது 5. சங்கற்பநிராகரணம்

(13) சிவஞான போதத்திற்கு சார்பு நூலாக அமைவது

1. சிவஞான சித்தியார் 2. உண்மை விளக்கம் 3. வினாவெண்பா 4. சிவப்பிரகாசம் 5. திருவுந்தியார்

(14)அறிவித்தால் அறியும் தன்மையும்,சார்ந்ததன் வண்ணமுமாய் நிற்பது

1. பசு 2. பதி 3.பாசம் 4. ஆணவம் 5.மாயை

(15) புறச்சந்தானக்குரவர்களின் பெயர்கள் அடங்கும் தொகுதி

1. திருநந்திதேவர்,சனற்குமாரர்,சத்தியஞான தரிசினிகள்,பரஞ்சோதி முனிவர்.
2. மெய்கண்ட தேவர்,அருணந்தி சிவாச்சாரியார்,மறைஞான சம்பந்தர்,உமாபதி சிவாச்சாரியார்.
3. சத்திய ஞானதரிசினிகள்,சனற்குமாரர்,மெய்கண்டார்,அருணந்தி சிவாச்சாரியார்.
4. உமாபதி சிவாச்சாரியார்,மெய்கண்டார்,திருநந்திதேவர்,பரஞ்சோதிமுனிவர்.

(16) ஆணவத்தின் எட்டு குணங்களுள் சில அடங்கும் தொகுதி.

1. இருத்தல்,கிடத்தல்,கற்பம்,அஞர் 2. விடுதல்,இயற்றல்,விகற்பம்,கற்பம். 3. கொலை,அஞர்,மதம்,நகை.
4. அஞர்,மதம்,நகை,மேவல். 5. குரோதம்,மோகம்,கொலை,பரநிந்தை

(17) சைவசித்தாந்தம் குறிப்பிடும் முத்திக்கான படிமுறைகளாக அமைவன

1.இருவினை ஒப்பு,சத்திநிபாதம்,நல்வினை 2. சத்திநிபாதம்,இருவினை ஒப்பு,மலப்பரிபாகம்
3. மலப்பரிபாகம்,சத்திநிபாதம்,இருவினைஒப்பு 4. மலப்பரிபாகம்,இருவினை ஒப்பு,சத்திநிபாதம்
5.இருவினை ஒப்பு,மலப்பரிபாகம்,சத்திநிபாதம்.

(18) கன்மத்தின் செயல்கள் அடங்கும் தொகுதி

1. கிடத்தல்,விடுத்தல்,கற்பம்,மோகம் 2.பரநிந்தை,மேவல்,கொலை,மதம் 3.அஞர்,விகற்பம்,இயற்றல்,இருத்தல்
4. இருத்தல்,இயற்றல்,பரநிந்தை,மேவல் 5. விடுதல்,கிடத்தல்,குரோதம்,மதம்

(19) சிவ தத்துவத்தில் அடங்குவது

1. சுத்தாசுத்த மாயை 2.அசுத்தமாயை 3. சுத்தமாயை 4. சுத்தஅசுத்தமாயை 5. அசுத்தாசுத்தமாயை

(20) சிவஞான போதத்தை இயற்றியவர்

1.அருணந்தி சிவாச்சாரியார் 2. உமாபதி சிவாச்சாரியார் 3. திருவியலூர் உய்யவந்ததேவர்
4. மனவாசங்கடந்ததேவர் 5. மெய்கண்டதேவர்

(2×20 =40)

பகுதி-2

மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(01)சைவ சித்தாந்த இறைக்கோட்பாட்டினை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.

(அ) இறைவன் உளான் என நிரூபிக்கும் முறைகள்.

(ஆ) இறைவனின் இயல்புகள்.

(இ) இறைவனும் ஆன்மாவும்.

(6+8+6=20)

(02) சைவ சித்தாந்த ஆன்மக் கோட்பாட்டினை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(அ) ஆன்மாவின் இயல்புகள்

(ஆ) ஆன்மா இறையருள் பெறும் வழிகள்

(இ) முத்திப்பேறு

(8+7+5=20)

(03) சைவ சித்தாந்தத்தில் பாசம் தொடர்பாக மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.

(அ) ஆன்மாவும் மும்மலங்களும்

(ஆ) ஆணவ மலம்

(இ) கன்மக்கோட்பாடு

(ஈ) மாயைக்கோட்பாடு

(5+5+5+5+=20)

(04) சைவ சித்தாந்தம் தொடர்பாக மேல்வரும் விடயங்களை விளக்குக.

(அ)சைவ சித்தாந்தம் என்பதன் பொருள் விளக்கம்

(ஆ)சைவ சித்தாந்தம் ஏற்கும் பிரமாணங்களின் சிறப்பு

(6+14=20)